[7th September 1960

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த மாதிரி அதிகாரம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அம்மாதிரி ஏதாவது இருக்கிறது என்று எனக்கு தெரியப்படுத்தினால் அதை வைத்துக் கொண்டு இனிமேலாவது அதன்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ள முயற்சி பண்ணுகிறேன்.

Women's welfare

* 522 *Q.*—**SRI P. G. MANICKAM :** கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் மாதர் நல இலாகா ஸ்டேட் அட்வைசரி கமிட்டியில் மொத்தம் எத்தனை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் ? இவர்களுள் ஹரிஜனங்கள் எத்தனை பேர் ?

(ஆ) மாதர் நல இலாகா மூலமாக கிராமங்களில் என்னென்ன வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) There are 12 members. There is no Harijan Member in the Committee.

(*b*) A three-fold programme under Social Education, Pre-Basic Education and Cottage Industires is being implemented by the Women's Welfare Department in the villages. Instructions in such subjects as Home Science, First Aid, etc., and training in simple handicrafts like spinning, tailoring, etc., and also in remuneratives handicrafts are given to women of the villages. Pre-Basic classes are conducted for the benefit of children.

SRI K. B. S. MANI : இந்த மாதர் நல இலாகா பொதுவாக ஹரிஜனங்களுக்கு அதிகமாக சேவை செய்வதில் அக்கறை காட்டவேண்டியிருப்பதனால் இந்த பன்னிரண்டு மெம்பர்கள் கொண்ட கமிட்டியில் இனிமேல் ஹரிஜனங்களுக்கும் இடம் கொடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஹரிஜனங்களுடைய நலனைக் கவனிக்க ஹரிஜனங்கள் இருந்தால் தான் முடியும் என்ற கருத்தைக் கூடிய சீக்கிரம் நீக்கிவிடவேண்டும். ஹரிஜனங்களுடைய நலனின் இனி ஹரிஜனங்கள் அல்லாதாருக்கும் அதிக சிரத்தை ஏற்படுவதற்கு ஊக்கம் அளிக்கவேண்டும்.

Diversified courses

* 523 *Q.*—SRI T. S. RAMASWAMY : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of Higher Secondary Schools (High Schools) in the State where diversified course (functional or professional) were adopted during the last three years;

(*b*) the nature of these courses;

(*c*) whether any equipments (by way of mechanical implements) were allotted and purchased in various High Schools in the Kanyakumari district before the reorganization and whether they are utilised; and